திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> :பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,10,28,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 17–7–80 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*51. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 36 மேலும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

*52. 1980–81 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (தமிழ், ஆங்கிலம்)

*53. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 37 பொதுப் பணிகள்-கட்டிடங்கள், 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி பற்றிய விவரங்கள் (ஆங்கிலம்).

1980 ஜூலை 16]

*54. பதவிகள்–சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை (1980–81) (ஆங்கிலம்).

**55. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய–அறக் கட்டளைகள் (திருத்தம்–சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1980).

**56. 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1980).

**57. 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1980).

**58. 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1980).

௵59. 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

௵60. 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

---

*15–7–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

**13–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

௵15–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.